Original Suit No.895/2017 நாள்: 24.06.2026

**பி.வா.சா 1 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி எனக்கு தெரிந்தவர் என்றால், சரிதான். வாதி எனக்கு உறவினரா என்றால், இல்லை. வாதி எனக்கு எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால், சுமார் 7,8 வருடங்கள் பழக்கம். 2006 யிலிருந்து 2012 வரை எனது இடத்தில் வாதி மாவு அரைக்கும் இயந்திரம் போட்டு கடை வைத்திருந்தார். இவ்வழக்கிற்கு முன்பு, வாதிஎ னக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. வாதி அனுப்பிய வழக்கறிஞர்அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்றால், நான் வாங்கவில்லை. அவர் அனுப்பிய விவரம் தெரியுமா என்றால், தெரியாது.

2. வாதி அனுப்பிய வழககறிஞர் விவரம் எனக்குதெரிந்திருந்து என்றும், வழக்கிற்கான நான் பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–1 யில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால், ஆமாம். 2011 யில் நான் வாதியிடம் ரூ.1,00,000/– கடன் பெற்ற சமயத்தில் 4,5 வெற்று கடனுறுதிச்சீட்டுகளில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்திருந்தேன். வா.சா.ஆ–1 அந்த வெற்று கடனுறுதிச்சீட்டுகளில் ஒன்றாகும். வாதி வழக்கு தாக்கல் செய்த விவரம் எப்போதிலிருந்து எனக்கு தெரியும் என்றால், 2017 யிலிருந்து தெரியும். போலியான கடனுறுதிச்சீட்டை வைத்து வாதி வழக்கு தாக்கல் செய்துளளார் என்று காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால், ஆமாம்.

3. எதிர்வழக்குரையை 2025 யில் தாக்கல் செய்தேன் என்றால், ஆமாம். என்னிடம் காட்டப்படும் பி.வா.ச.ஆ.2 யில் எனது பெயர் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால், ஆமாம். வாதி தான் தவறாக மேற்படி ஆவணத்தில் பெயர் குறிப்பிட்டிருந்தார். அதை நான் கேட்தற்கு அவர் தான் திருத்தம் செய்தார். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை வாதி தான் தயாரித்து கொடுத்தார் என்றும், அதில் எனது பெயர் தவறாக எழுதியுள்ளதை வாதிதான் திருத்தினார் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், ஆமாம். பி.வா.சா.ஆ.2 ல் உள்ள தேதியும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால், இல்லை. பி.வா.சா.ஆ.2 யில் சாட்சிகள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால், ஆமாம். என்னிடம் காட்டப்படும்

பி.வா.ச.ஆ.1 யில் சாட்சியாக உள்ள நபர்களில் 1 வது நபரான ராமசாமி எனது உறவினர் ஆவார். அதில் 2 வதாக நான் கையொப்பம் செய்துள்ளேன்.

4. பி.வா.ச.ஆ.1 மற்றும் 2 யில்உள்ள கையொப்பங்கள் வாதியுடையது அல்ல என்றாலும், அவர் எப்போதும் மேற்படி ஆவணங்களை எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், சரியல்ல. வாதி எனது இடத்தில் வாடகைதாராக இருந்தார் என்பதை பயன்படுத்தி மோசடியாக பி.வா.ச.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களை ஏற்படுத்தினேன் என்றால், சரியல்ல. 2017 யிலிருந்து எனக்கு வழக்கு பற்றிய விவரங்கள் தெரிந்திருந்தும, வேண்டுமென்றே வழக்கை தாமதப்படுத்தி பி.வா.ச.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பி.வா.ச.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் உண்மையாக இருப்பின், வழககறிஞர் அறிவிப்பிற்கு பதில் கொடுத்திருப்பேன் என்றாலும், உரிய காலத்தில் வழக்கை நடத்தி இருப்பேன் என்றால், சரியல்ல. கடனுறுதிச்சீட்டுகளில் நான் மோசடியாக மற்ற நபர்களின் கையொப்பத்தை போட்டது சம்பந்தமாக காவல்நிலையங்களில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

5. என் மீது வேறு கடனுறுதிச்சீட்டு சம்பந்தமாக வழக்குகள் உள்ளது என்றால், வாதியின் நண்பர் ராமசாமி தாக்கல் செய்த வழக்கும், இவ்வழக்கும் தான் உள்ளது. நான் நிறைய நபர்களிடம் கடன் பெற்று, அதை திருப்பி கொடுக்காமல் சில காலம்தலைமறைவாக இருந்தேன் என்றால், சரியல்ல. நான் வாதியிடம் கடந்த 24.02.2016 ம் தேதி தாவா கடனை பெற்றுக்கொண்டு, தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்தேன் என்றால், சரியல்ல. தாவா வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக மோசடியாக எதிர்கட்சி செய்து வருகிறேன் என்றால், சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கப்படவேண்டியது என்றால், சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**</u>

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.